

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!


## 'நன்மையும் கிருபையும்' தொடர்ந்திட ஓர் இரகசியம்!

'எனக்கு சொந்தமான ஆடுகள்!' என மேய்ப்பன் கூறுவதும், அந்த ஆடுகள் 'மேய்ப்பனை அறிவதுமே' (யோவான்.10:4) ஒருவன் "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்!" என்று கூறும் பாக்கியத்திற்கு உரியவன்!

வாழ்வில் சம்பவிக்கும் எவ்வித துயரங்களிலும், அது மரணப் பள்ளத்தாக்கின் நேரமாயிருந்தாலும், இந்த மேய்ப்பன் தன் ஆடுகளை நடத்தும் 'அற்புத பாதை' அவர்களை "அமர்ந்த தண்ணீரண்டையில்" அல்லது இளைப்பாறுதலுக்குள் அல்லது, விசுவாசத்துடன் சும்மா இருக்கும்படி நடத்துவதுதான்! இந்த நடத்துதலுக்கு கீழ்ப்படிந்து இளைப்பாறுதலை கண்டடையும் ஆடுகளை "என்னுடைய ஜனம்!" என ஆண்டவர் மகிழுகிறார் (எபி.4:9). 'சும்மா இருக்கும் அவனிடம்' அவரே கிரியை நடப்பித்து, அவன் ஜீவியத்தின் அனைத்து பகுதியிலும் "நன்மையும் கிருபையும்" தொடரச் செய்வார்! (சங்.23:6). அல்லேலூயா!

*-tr*

பெட்டகம் 20 | ஜுலை 2018 | பரல்கள் 7



## நன்மை ஒன்றே பேசும், நல்ல மரம்!

பிறரைத் தீமை பேசக்கூடாது என்பது மாத்திரம் சுவிசேஷம் இல்லை! (தீத்து.3:2). பிறரின் நன்மை ஒன்றே பேசவேண்டும் என்பதில்தான் இயேசுவின் நற்செய்தி அடங்கியிருக்கிறது (மத்.12:35). சொந்தப் பிள்ளைகளைக் கூட அநாகரீக வார்த்தையால் திட்டுவதும், சொந்த சகோதரனை ''மூடன்'' என்று ஆத்திரமாய் பேசுவதுமான திருக்கு நெஞ்சம் கொண்டதுதான் நம் இருதயம்!

**"Make the tree Good** - மரம் நல்லதாய் மாறினால்'' நல்ல கனி தரும்! என்றே இயேசு போதித்தார் (மத்தேயு.12:33). பரிசுத்த ஆவியின் துணையோடு, நல்ல கனி கொடாத தன் வேரில் (இருதயத்தில்) கோடாரி வைத்தவன் பெறுவதே நல்ல மரம்! (லூக்.3:9). அவனையே ''நல்ல மனுஷன்'' என இயேசு கூறினார்(வச.35).

இதுபோன்று, 'ஆணி வேரில்' கோடாரி வைத்து மரத்தை சாய்க்காமல், 'பெரிய விரியன் பாம்பை' குட்டி விரியன்பாம்பாக மாற்றினாலும், அந்த குட்டி வாயிலும் விஷம் இருப்பதால்.... தொடர்ந்து பொல்லாதவர்களாகவே இருப்பீர்களென்றும், ''நலமானவைகளை உங்களால் எப்படிப் பேச முடியும்?'' எனவும் இயேசு எச்சரித்தார்! (மத்தேயு.12:34).

இவ்வாறு, யாதொருவன் தன் 'இருதயம் நொறுங்குண்டு' ஆண்டவரிடம் வருகிறானோ, அவனையே அவர் காயம் கட்டி சுகமாக்குகிறார்! ஆம், அவன் இருதயத்தை கனிதரும் அல்லது நல்லவைகளையே பேசும் 'நல்ல மனுஷனாய்' மாற்றுகிறார் (சங்.147:3). *-Ed*


2018 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.**140.00** **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!

சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## ‘கிறிஸ்துவுக்குள் இல்லாத’ அனைத்தும் குப்பைகள்!

**வி**ருத்தசேதனமானது, “மாம்சத்தின் மேல் நம்பிக்கை யாயிராமல், ஆவியினாலே கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமைப் படுத்துவதை” (பிலி.3:3) மாத்திரமே இந்த விருத்தசேதனம் அடையாளமாய் கூறுகிறது. பவுல் தொடர்ந்து கூறும்போது, தன் மாம்சத்தின்படி மேன்மைப்பாராட்டுவதற்கு அல்லது மாம்சத்தில் நம்பிக்கை வைப்பதற்கு அநேக காரியங்கள் தனக்கு இருப்பதாகக் கூறினார். அவர் பரிசேயர்களுக்குப் பரிசேயன்! நியாயப் பிரமாண நீதியின்படி குற்றம்சாட்டப்படாதவர்! அதாவது, தன் பிள்ளை பருவம் முதற்கொண்டு, **முதல் ஒன்பது கற்பனைகளை** அப்பழுக்கில்லாமல் கைக்கொண்டு வாழ்ந்தவர். ஏனெனில், பழைய உடன்படிக்கையில், ஒருவர்கூட பத்தாவது கட்டளையை கைக்கொள்ள முடியவில்லை (ரோமர்.7:7-9). ஆனால், பவுல் **கிறிஸ்துவை அறிந்தவுடன்,** நியாயப்பிரமாண தரத்தின்படியான “தன்னுடைய மனுஷீக நல்ல குணாதிசயங்களை” ‘குப்பைகள்’ எனக் கண்டார்!

நானும்கூட ‘குப்பை’ என்ற வார்த்தையை, இந்த பூமியில் மதிப்பில்லாத எல்லாவற்றிற்கும் பயன்படுத்தியிருக்கிறேன். ஆகிலும், ‘குப்பைகள்’ (Rubbish) என்ற வார்த்தை நானாக பேசியதல்ல, அந்த வார்த்தையை பவுலே முதலாவதாக பயன்படுத்தினார் (பிலி.3:8).

**பூமியிலுள்ள அனைத்தும், மனுஷீகமான நீதிகளும்.... கிறிஸ்துவோடு ஒப்பிடும்போது, அவை அனைத்தும் குப்பைகள்! எனக்கூறினார். அவைகளை ‘குப்பைகளாக’ நீங்களும் காண முடிகிறதா?**

கிறிஸ்துவோடு ஒப்பிடும்போது, இந்த உலகத்திலுள்ள ‘பணம்’ முழுவதும் குப்பை என்பதைக் கண்டீர்களா? கிறிஸ்துவோடு ஒப்பிடும்போது, மனுஷருடைய எல்லா ‘கனமும்’ குப்பை என்பதைக் கண்டீர்களா? கிறிஸ்துவோடு ஒப்பிடும் போது, உலகத்திலுள்ள ‘சொகுசுகளை’ குப்பை என்று கண்டீர்களா?

தேவன் உங்களை எங்கே வைத்திருக்க விரும்புகிறாரோ, அங்கேயிருந்து நீங்கள் தேவனுடைய சித்தம் செய்வதும், கிறிஸ்துவின் சாயலில் வளர்வதும்.... தேவன் உங்களுக்கென வைத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்றுவதும் 'ஆகிய இவைகள் மாத்திரமே' நித்தியத்தின் கண்ணோக்கில் மேலானவைகள்!

வேறொரு கிறிஸ்தவ ஊழியன் கனம் செய்யப்பட்டு, நீங்கள் கனம் செய்யப்படவில்லையென்றால், அதினால் என்ன? நம்முடைய அழைப்போ 'கிறிஸ்துவின் நிந்தையை' புகழ்மணக்க பரப்புவதே யாகும். எவ்விதத்திலும், இப்பூமிக்குரிய கௌரவங்கள் அனைத்தும், குப்பைகள்தான்! வேறொரு கிறிஸ்தவ ஊழியன் அதிக பணம் பெற்று, உங்களைவிட அதிக வசதியோடு வாழ்ந்தால், அதைக்குறித்து பொறாமைப்படுகிறீர்களோ? அப்படியானால், நீங்கள் பணத்தை 'குப்பை' என இன்னமும் காணவில்லை. அவர்கள் நீங்கள் வைத்திருப்பதைவிட 'அதிக குப்பைகள்' வைத்திருக்கிறார்கள், அவ்வளவுதான்! அவர் அதிக குப்பையை வைத்திருக்கிறபடியால் நீங்கள் வருத்தமடைகிறீர்களோ? தன்னிடமுள்ள அனைத்தையும் 'குப்பைகள்' என பவுல் கண்டபடியால், பூமியிலுள்ள சொகுசுகள், ஆஸ்திகள், மற்றும் கௌரவங்கள் ஆகிய அனைத்திலும் விடுதலை பெற்ற மனிதனாய்...... முழு சுதந்திரத்தோடு, **யாதொரு இடையூறும் இல்லாது, கர்த்தரை சேவித்தார்.**

இவ்வாறு, இயேசு கிறிஸ்துவுக்கு வெளியே உள்ள அனைத்துமே குப்பைகள் என நாம் காணும் வரை, நாம் ஆண்டவரை உத்தமமாய் சேவித்திட இயலாது. இந்த பூமியில் வாழ்வதற்கு நமக்குப் பணம் தேவை என்பது உண்மைதான்! கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம், நம்முடைய கைகளின் பிரயாசங்களின் மூலமாய் பணம் சம்பாதிக்கலாம் அல்லது 'நாம் ஒருவரிடமும் கேட்காமலே' அல்லது ஒருபோதும் தேடாமலே, நமக்கு தேவன் மூலமாய் வரும் காணிக்கை ஈவுகளைப் பெற்றுக்கொண்டு, இந்த பூமியிலுள்ள நம்முடைய ஜீவியத்திற்காக பயன்படுத்தமுடியும். உணவுக்காக, உடைக்காக, வீடு மற்றும் நம்முடைய பிள்ளைகளின் கல்விக்காகவும் செலவழித்திட முடியும். ஆனால், நம்மிடத்தில் உள்ளவைகளை மற்றவர்களின் பொருளாதாரத்தோடு, ஒப்பிட்டுப் பார்ப்பதும் அல்லது பண விஷயத்தில் நம்முடைய மனப்பான்மை 'கணக்கு பார்க்கும் கஞ்ச மனப்பான்மையாய்' இருக்கும்போதும் அல்லது **கர்த்தருக்கு செய்யும் ஊழியத்திற்கு பணத்தையே பிரதானமாய் வைக்கும்போதும்,** நாம் தேவனுடைய வழியைவிட்டு முற்றிலுமாய் விலகிச் சென்றிடுவோம்.

*பணம் எப்போதும், நம்முடைய வேலைக்காரனாயிருக்க வேண்டுமே யல்லாமல், எஜமானாய் இருந்திடக்கூடாது!*

*பரலோகத்தின் வீதிகள் பொன்னினால் போடப்பட்டதாகும். ஆம், தங்கம் நம் கால்களுக்கு கீழாகவே பரலோகத்திலிருக்கும்! எந்தவொரு உண்மையான கர்த்தருடைய ஊழியனுக்கும், இந்த பூலோக வாழ்க்கையில், பணம் அவனுடைய கால்களுக்கு கீழாகவே இருக்க வேண்டும்! இந்த பூமியிலுள்ளவர்கள், தங்கத்தை தங்கள் தலையில் வைத்து கொண்டாடுகிறார்கள்! தங்கத்தை உங்கள் கால்களுக்கு கீழாக கொண்டு வர முடியுமென்றால், நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல ஆயத்தமாகி விட்டீர்கள் என்றே கூறலாம்!*

**ஆனால், உங்கள் தலையில் அல்லது உங்கள் மனதில் பணமே எப்போதும் இருந்தால், நீங்கள் இன்னமும் பரலோகத்திற்குச் சென்றிட ஆயத்தமாகவில்லை!**

*நீங்கள் பணத்தையும், அதேபோல உலக கௌரவத்தையும் சீக்கிரத்தில் அது இருக்க வேண்டிய இடத்திற்கு கொண்டு வந்திட கற்றுக்கொடுங்கள். இந்த உலகத்திலுள்ள கீர்த்தியோ அல்லது அபகீர்த்தியோ ஆகிய இரண்டுமே ஒரே விதமாய் காணப்பட வேண்டும். ஏனென்றால், அவைகள் குப்பைகள்!*

*ஏனெனில், அநேக கிறிஸ்தவர்கள் வேறுவிதமாய் நடக்கிறார்கள் என்று மாத்திரமல்லாமல், அவர்கள் '***கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்** *என்றும்' பவுல் கூறினார் (பிலி.3:18). அவர்களின் தேவன் வயிறு! (பிலி.3:19). நம் பசி அல்லது நம் வயிரே நமக்கு தேவன் என எப்படி நாம் அறிந்து கொள்ளமுடியும். ஒருநாளில் மனைவி சமைத்த உணவு 'ருசியில்லையென்றால்' அதனிமித்தம் உங்கள் மனைவியிடம் நீங்கள் ஆத்திரமடைந்தால் 'உங்கள் நாவின் சுவை அரும்புகள்' உங்கள் தேவன்! என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் நிலை இவ்வாறு இருக்கும்போது, உணவை புசிப்பதற்கு முன்பாக நீங்கள் ஜெபித்திடும் ஜெபம், ஆண்டவராகிய இயேசுவிடம் ஜெபிப்பதாக நீங்கள் செய்திடும் வெறும் கற்பனையேயாகும். உண்மையில், நீங்களோ உங்கள்* **சுவை அரும்பிற்கு முன்பாகவே உங்கள் தலையை தாழ்த்தி இருக்கிறீர்கள்!** *உங்கள் நாவின் சுவை-அரும்புகளை, உங்கள் தேவனாய் மாற்றிக்கொள்ள வேண்டாம்! வயிறு, உங்கள் தேவனாய் இருக்கக் கூடாது. கிறிஸ்து மாத்திரமே, உங்கள் தேவனாய் இருப்பாராக! ஒரு சிறந்த உணவு சமைக்கப்பட்டால், கர்த்தரை துதியுங்கள்! ஒரு நாளில் உணவு ருசியில்லாதிருந்தாலும், கர்த்தரைத் துதியுங்கள்! ஒரு நாளில் நீங்கள் அலுவலகத்திற்கு போவதற்கு முன்பாக காலை உணவை,*

*உங்கள் மனைவி ஆயத்தமாய் வைத்திருக்கவில்லையென்றால், உங்கள் மனைவியை கோபித்துக் கொள்ளாதீர்கள்! அதற்குப் பதிலாக "ஒருவேளை, இன்று காலை நான் உபவாசமிருக்க கர்த்தர் விரும்பியிருக்கிறார்! ஆகவேதான் இன்றைய காலை உணவை எனக்கு ஆயத்தமாய் இருந்திட, அவர் அனுமதிக்கவில்லை! ஒருவேளை நான் உணவின்மீது அதிக நாட்டம் உடையவனாய் இருப்பதைக் கண்டு, அதிலிருந்து நான் விடுதலைபெற கர்த்தர் விரும்பியிருக்கக்கூடும்!". இவ்வாறாக நீங்கள் நன்றி கூறிவிட்டு, காலை உணவு இல்லாமலே அலுவலகத்திற்குச் செல்லுங்கள்! நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறபடியால், உங்கள் வயிறு, உங்கள் தேவனாய் மாறுவதற்கு விட்டு விடாதீர்கள்! (வச.20). ஆமென்*

*– சகரியா பூணன்*

---

## 'சொந்த சகோதரன்' செய்த தீங்கிலிருந்து விடுவித்த கர்த்தர்!

*என் சகோதரன் என்மீது கொண்டிருந்த பகை 'முகாந்திர மில்லாத' பகை என்பதை நான் தெளிவாய் கண்டேன்! எப்போதுமே பகை கொண்டவர்கள் நிம்மதியாய் இருப்பதில்லை. அதன் விளை வாகவே, இன்னும் அதிகமான தீமை செய்ய எனக்கு விரோதமாக திட்டம் தீட்டியிருந்தான். அவன் தீட்டிய திட்டம் என் கணவருக்கு அதிகமான மன உளைச்சலை ஏற்படுத்திவிட்டது. எங்கள் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள ஒரு மகா ஐசுவரியமான கனவான், என் கணவர் மீது பொறாமை நிறைந்த வெறுப்பு வைத்திருந்தார். அதனிமித்தம், என் கணவரை நிர்மூலமாக்கிவிடவும் தீர்மானித்து விட்டார்!*

**இந்த சமயத்தில்தான், அந்த கனவான், *'என் சகோதரன் எங்கள் மீது கொண்டிருந்த பகையை'* கேள்வியுற்றார். அந்த கனவான், தன் அழிவிற்குரிய திட்டத்தை என் சகோதரனிடம் சென்று பகிர்ந்து கொண்டதும், என் சகோதரனின் பகைக்கு வலுவூட்டுவதாய் மாறியது. 'பகையின் ஒரு மனம்' அவர்களுக்குள் வந்தபடியால், எனக்கு விரோதமாய் ஒரு பொய் பத்திரம் தயாரித்தார்கள்.**

*அந்த பத்திரத்தில் நானும் என் சகோதரனும், அந்த கனவானிடத்தில் சுமார் 20 இலட்சம் கடன் வாங்கியதாக தயார் செய்தார்கள். அந்த பத்திரத்திற்கு என் சகோதரன் கையெழுத்திட்டார். அந்த கனவான், என் சகோதரனிடம் "இந்த வழக்கு ஜெயித்தவுடன், நீயே அந்தப் பணத்தை வைத்துக்கொள்.... எப்படியாகிலும் உன் சகோதரியின் அரண்மனை வாழ்க்கை சீர்கெட்டு போகட்டுமே!" என ஒப்பந்தம் செய்துகொண்டார்.*

*என் சகோதரன் இப்போதுதான் திருமணம் செய்த வாலிபனாய் இருந்தபடியால்* **'முகாந்திரமில்லாத அவருடைய பகையில்'** *தான் எவ்வித தீயசெயல் செய்கிறோம் என்பதை புரிந்து கொள்ளாமலே இதைச் செய்தான். எங்களுக்கு வக்கீல் நோட்டீஸ் வந்தபோது, என் கணவர் மிகுந்த எரிச்சலடைந்தார். அந்த பத்திரத்தின் நகல் பொய் என்பதை நான் விளக்கிச் சொல்லியும், அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவருடைய கோபத்தின் சீற்றத்தில் என்னுடன் பேசுவதற்கு மறுத்துவிட்டார். நான் களங்கமற்றவள் என்பதை, அவருடைய ஆத்திரம், ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது! என் கணவரோ "இவ்வளவு பெரிய தொகையை நீயும் உன் சகோதரனும் வாங்கியபடியால், இந்த வழக்கை நீயே எதிர்த்துப் போராடு! நான் உன்னோடு வரமாட்டேன்!" என கோபத்துடன் கூறிவிட்டார். 20 இலட்சம் தொகை மிக பெரியதாய் இருந்தபடியால், அது நாங்கள் வசித்த அரண்மனையையே விற்க வேண்டிய நிலையாய் இருந்தபடியால், என் கணவர் நிலைகுலைந்து, ஒரு குறிப்பிட்ட தொகையை என் கையில் கொடுத்து, இந்த அரண்மனைக்கும் உனக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை.... நீ விரும்புகிறபடி வாழ்ந்து கொள்" என முறித்துப் பேசிவிட்டார்!*

*மறுபக்கமோ, என் சகோதரன் என் மீது தயார் செய்த பொய் பத்திரத்தை மாற்ற மறுத்து, என்னை அழிக்கும் எண்ணத்திலேயே இருந்தான். வழக்கும் தொடங்கிவிட்டது! நானோ கர்த்தரிடம் சென்று "கர்த்தாவே உமது நீதி விளங்கட்டும், என் கணவரின் ஆதரவு இல்லாத இந்த நிலையில், நீர் என்னோடு வாரும்!" என மிகுந்த இளைப்பாறுதலோடும் சமாதானத்தோடும் ஜெபித்து, நானே தனியாக வழக்கு மன்றத்திற்குச் சென்றேன். வழக்கறிஞர் ஒருவரை வைத்துக் கொள்ள மனதில்லாமல், எனக்குள் ஏற்பட்ட.....*

> **ஆவியின் உந்துதல்படி, நேரடியாகவே நீதிபதியின் அறைக்குச் சென்றுவிட்டேன். என் மீது தொடுக்கப்பட்ட வழக்கின் சாரத்தை அழுத்தமும் திருத்தமுமாக அவரிடம் விவரித்தேன். அவ்வாறு பேசுவதற்கு தேவனே அந்த வேளையில் என் நாவில் வார்த்தைகளைக் கொடுத்தார் என்றே விசுவாசிக்கிறேன்! (மத்தேயு.10:19,20).**

*ஏனென்றால், என்னுடைய வார்த்தையில் உள்ள உண்மையை, அந்த நீதிபதி தெளிவாய் அறிந்து கொண்டார். அதிர்ச்சியுற்ற நிலையில் அந்த நீதிபதி "இந்த வழக்கு, வழக்கு தொடுத்த கனவானுக்கு ஆதரவாகவே முடிவு செய்யப்பட்டிருந்தது!* **நாங்கள் தவறு செய்து விடாதபடி** *என்னிடம் கூறிய உங்களின் உண்மையான வார்த்தைகளுக்கு*

நன்றி, உங்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று நம்புகிறேன்'' எனக் கூறி, என்னை அனுப்பி வைத்து விட்டார். எதிர்பார்த்ததைவிட, வழக்கு சீக்கிரமாய் முடிந்துவிட்டது. வழக்கின் தீர்ப்பு கூறும் நாள் வந்தது. **நீதிபதி குழுவினர்களின் அறிக்கை என்னை நிரபராதி என்றும்,** அந்த பத்திரத்திற்கு உறுதியான ஆதாரமில்லை என்றும் புறக்கணித்து, வழக்கை முடித்து தீர்ப்புக் கூறினார்! ஆகிலும், வழக்கு தொடுத்தவர் எங்கள் பகுதியின் மிகப்பெரிய கனவானாய் இருந்தபடியால், வழக்கு செலவீனத்தின் ஒரு பகுதியாக 500 ரூபாய் மாத்திரமே அவருக்குத் தரும்படி கட்டளை பிறப்பித்தார். வழக்கின் 20 இலட்சம் அபகரிப்பை 500 ரூபாயாக தேவன் மாற்றியதைக் கண்ட என் கணவர், சொல்லி முடியாத மகிழ்ச்சி அடைந்தார்! எப்படி சம்பவித்தது? என்ற ஆச்சரியத்தில் முழு மகிழ்ச்சி கொண்டார்! என்னை வியப்புடன் பார்த்து பூரிப்படைந்தார்! இவ்வாறு மலைபோல் வந்த பயங்கரமான வழக்கை 'ஒரு கணப்பொழுதில்' கர்த்தர் மாற்றி, என்னைக் காத்து கொண்ட செயல், வழக்குத் தொடுக்க ஆதரவாயிருந்த என் சகோதரனுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை! அவன் இன்னமும் என்மீது அதிக கோபமே கொண்டிருந்தான். நானோ கர்த்தருக்கு நன்றி செலுத்தினேன்!

– மேடம் குயான்

---

## 'ஒளிரும் கிறிஸ்துவின் மகிமை' சபைகளில் ஏன் இல்லை?

**ஆ**தி கிறிஸ்தவர்களிடமிருந்த ஓர் விசேஷித்த அடையாளமாய் இருந்ததெல்லாம், அவர்கள் உள்ளான ஜீவியத்தில் ஒளி சுடர்விட்ட ''தெய்வீக பிரகாசமே'' யாகும்! அவர்களின் இருதயங்களில் சூரியனே (உலகத்தின் ஒளியே) வந்து உதித்து 'வெளிச்சத்தையும் வெப்பத்தையும்' தந்தபடியால், தெய்வ பிரசன்னத்திற்கு வேறு யாதொரு மூலதனங் களும் அவசியமில்லாதிருந்தது! சபையாய் கூடிவந்த அந்த கிறிஸ்தவர் களிடம் காணப்பட்ட ''**உள்ளான ஒளியின் சாட்சியே**'' போதுமானதா யிருந்தது. ஆனால், இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளை சற்று ஏறிட்டுப் பாருங்கள். ''கிறிஸ்துவின் ஜீவ ஒளி'' அங்கு இல்லை என்பது கண்கூடாகத் தோன்றவில்லையா? **தங்கள் சபை கூடுகையை நியாயப்படுத்தும் பாட்டு, ஜெபம், பிரசங்கம், காணிக்கை** போன்றவைகளையே வைத்துக்கொண்டு 'கிறிஸ்துவின் பிரகாசத்தை இழந்து' அந்தகாரத் திற்குள் உழன்று கொண்டு, நாங்களும் சபை என கூறுகிறார்கள்!?

தங்களையே தீர்க்கதரிசிகளாக வைத்துக்கொண்டவர்கள்தான் இன்றைய பெரும்பாலான சபைகளில் இருக்கிறார்கள். சுற்றி

அமர்ந்திருக்கும் ஜனங்களோ, கண் ஒளி இல்லாத மாந்தர்கள்! இவர்களுக்கு 'ஏதோ ஒளி இருந்தால் போதும்' என கூறி, தேவனுடைய 'பிரகாசமான ஒளியை' புறக்கணிக்கிறார்கள். நாங்கள் கூடி வருகிறோம், 'மார்க்க அனுபவத்தை' பெற்றுக்கொள்கிறோம்..... அதுபோதும்! என்றே மாய்ந்திடும் எண்ணற்ற சபையோர்களைக் குறித்து பரிதபிக்காமல் நாம் என்ன செய்வது? 'ஏதோ அனுபவம் உள்ளது' என்பதற்கும் 'எங்கள் நடுவில் ஒருவர் இருக்கிறார்' என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? ஆதி கிறிஸ்தவ சபைகளில் கூடி வந்தவர்கள் "தங்களோடு வாசம் செய்த தெய்வத்தின் அதிசயத்தையே" நிறைவாய் பெற்றிருந்தார்கள்.

**'எங்கள் நடுவில் ஒரு பெரியவர் இருக்கிறார்' என்ற உணர்வு எல்லோரையும் பற்றிப் பிடித்துக் கொண்ட தெய்வீக உணர்வாய் இருந்தது. இந்த ஒரு ஆச்சரியம் தவிர, வேறு எது உங்கள் சபையில் இருந்தாலும், அது கிறிஸ்துவுக்கு வெளியே உள்ள குப்பைகள் என அறியுங்கள்!**

சுடர் வீசும் அவரது பிரசன்னமே 'உங்களைச் சூழ இருந்து தாக்கும்' ஆவிக்குரிய எதிரிகளை வீழ்த்திடச் செய்து, சபையைப் பாதுகாக்க வல்லது! அங்கு தாபரித்திருக்கும் கர்த்தரை ஆராதனை செய்பவர்கள்.... அவிசுவாசம் கொண்ட எந்த மனிதர்களின், எதிர்ப்புகளையும் துட்சமென உதறி முன்னேறுவார்கள்! தங்கள் சபையில் வாசம் செய்யும் கர்த்தரைக் கண்டு, அவருடைய வார்த்தையைக் கேட்டு, பொங்கி வழியும் இருதயம் கொண்டவர்கள், எந்த சந்தேகங்களுக்கும் இடம் தரமாட்டார்கள்! தங்களின், உறுதிகொண்ட நிலையான நம்பிக்கையை தேவன் வாசம் செய்யும் தங்கள் சபையில் வைத்திருப்பார்கள்! இங்கு ஒருவர் இருக்கிறார் என அறிவதும்.... **அந்த வல்ல தேவனை தொடும் பாக்கியம் பெறுவதுமாகிய ஒரு சபையின் ஸ்தலத்தைப்போல், யாதொரு மேன்மையும் இல்லை** என கூறுங்கள்! மெய்யான உறுதியோடு தேவனைப் பற்றியிருக்கும் விசுவாசம் எங்கு உண்டோ, அந்த ஸ்தலத்தில் "தேவனை அறிகிற அறிவு" வான் மழையென பொழிந்திடும்! இப்போது உள்ளவர்களை நாம் என்ன சொல்வது? ஆதியிலிருந்த ஆவிக்குரிய வல்லவர்கள், எப்படியெல்லாம் தேவனை அனுபவித்தார்கள் என்பதை அறிந்திடவே இவர்கள் மனந்திரும்ப வேண்டும்!

இன்றைய பெரும்பாலான சபைகள், கற்கால பனி உலகத்தில் மூழ்கி கிடக்கிறது. அந்த பனி உலகத்தை முறித்து, மேல் நோக்கிய கிறிஸ்துவின் தூய ஒளிக்கு வர இன்றைய சபைகள் அதிக பாடுபட வேண்டும். ஞானமுள்ள சபைத் தலைவர்கள், மானிட இருதயத்தின்

மெய்யான ஆவிக்குரிய தேவையை அறிந்திருப்பார்கள். சபையில் **சீஷர்களாய் மாறிய கிறிஸ்தவர்களே** நிரம்பியிருக்க வேண்டும்... அவர்கள் திருப்தி அடைய நினைப்பதெல்லாம் "**ஆவிக்குரிய திராட்ச ரசத்தின்**" மகிழ்ச்சியேயாகும். கர்த்தருக்குள் கொண்ட இந்த மகிழ்ச்சியைத் தந்திட இயலாத சபை, **மாம்சத்திற்குரிய ரசத்தை** கொடுத்து பொய்யான திருப்தியில் ஜனங்களை வைத்திருக்கப் பார்க்கிறார்கள்! இதுதான் இன்றைய சபைகளின் அவல நிலையாய் இருக்கிறது. இன்றைய சுவிசேஷ சபைகள் இந்த கொடிய தரித்திர நிலையிலிருந்து மீளுமா? கிறிஸ்து, சபைகளில் வாசம் செய்யும் மக்களின் 'இருதயங் களுக்காகவே' மரித்தார்! ஒவ்வொரு விசுவாசியினுடைய தாகத்தையும் 'பரிசுத்தாவியானவரே' தாகம் தீர்க்கும் நதியாய் வந்தார்! இதைத் தவிர வேறு எதற்கு உங்களுக்கு கிறிஸ்து வேண்டும்? உங்களை திருப்திப்படுத்த 'பரிசுத்தாவியை தவிர' வேறு என்ன வேண்டும்? **இந்த கேள்வியை சவாலாய் முன் வைத்திடும் சபையே** சிறந்த ஆவிக்குரிய சபை! என்பதை அறியுங்கள்.

பரிசுத்தாவியின் மிகச் சிறந்த ஆர்வம் என்னவென்றால், "வாஞ்சையுள்ள எந்த இருதயத்தையும் ஊடுருவிச் செல்வதுதான்!" அவர், சபையில் வாஞ்சையுடன் அமர்ந்திருப்போரின் மனதை ஊடுருவிச் செல்வார்! **ஆவியில் ஊடுருவிச் சென்று 'மனுஷீக ஆவியை' புறக்கணிப்பார்!** 'மனுஷீக ஆவி' மானிட இருதயத்தில் வாசம் செய்யும் வெற்றிடமான ஆவியாகும். அதை அகற்றி, 'தேவனையே' ஜனங்களின் இருதயத்தில் கொண்டு வரும் கிரியை, சபையில் எப்போதும் நடந்துகொண்டே இருக்க வேண்டும். பரிசுத்தத்திற்கு உண்டாகும் கேட்டை, ஆவியானவர் அந்த சபையில் நிரந்தரமாய் எதிர்த்து நிற்பார்.

> **ஒரு பாவ மனிதனை சபையில் மனம் குளிர வைத்துப் பாருங்கள், அதுபோதும்.... ஒளி சபையிலிருந்து விரட்டப்படும்!**

இதுபோன்ற சபையின் நிலைமையைக் குறித்து தேவன் சொல்லி முடியாத வேதனை அடைவார்! பாவத்திற்கு அநேக பக்கங்கள் உண்டு. அது ஏராளமான நோய்களைத் தாங்கியிருக்கும் ஒரு மனிதனைப்போல் உள்ளது. அந்த நோயாளியை அந்த பாவம் கொன்றுவிடும் என்பது மாத்திரம் இருந்தால் ஒன்றுமில்லைதான்..... ஆனால், அந்த பாவ மனிதன் மூலமாய் தோன்றும் முரட்டாட்டங்கள், மாறுபாடான நடக்கைகள், மீறுதல்கள் ஆகிய அனைத்தும், விலையேறப் பெற்றவைகளையும் (உண்மை சீஷர்களையும்) பாதிக்கச் செய்யும் என்பதை சபை அறிந்திருந்து விழிப்பாய் செயல்பட வேண்டும்.

*'சீஷர்களாய் மாறி இருக்கிறோம்' என கூறும் சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும், தேவன் தம்முடைய நித்திய ஜீவனை அவர்களுடைய ஆவியில் நிறைத்திருப்பார்! இந்த நிலையில் உள்ளவர்கள் மாத்திரமே, தேவன் கட்டி எழுப்பும் புதிதான நித்திய மாளிகைக்கு அங்கத்தினர்களாய் இருப்பார்கள். இந்த நித்திய வாசம் செய்தவர்களை மாத்திரமே, மறைந்து போகும் உலக மாயத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், எல்லா பாவ குழியிலிருந்தும் தேவன் விரைந்து வந்து தூக்கி எடுப்பார். அதுவே சபை! சபையின் மிகப்பெரிய பொக்கிஷம் என்ன?* **'கிறிஸ்துவையே'** *நம்முடைய மாறாத என்றென்றுமுள்ள சுபாவமாய் வழங்குகிறாரே, அதுவல்லவோ மகா சிறந்த ஈவு! அதை வலியுறுத்தும் சபையே சபை! பொற்தல வீதியோ, முத்துக்களான பரலோக வாசல்களோ.... இன்னும் எதுவெல்லாம் பரலோக ஈவுகளாய் நீங்கள் பெற்றிருந்தாலும்....*

**"கிறிஸ்துவையே நம்முடைய சுபாவமாய்" அருளப்படும் ஈவே மேலானது என்று அறிவிக்கும் சபையே சபை! நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக, கிறிஸ்துவின் சுபாவத்தை வடிவமாய் பெறுவதே சபை! "அந்த ஒப்பற்ற தெய்வ புருஷன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குள் இருப்பதே, அந்த மகிமையின் நம்பிக்கை!" (கொலோசெயர்.1:19-29).**

*இந்த இலக்கு எங்கே உள்ளது? அதுவே கிறிஸ்துவின் மகிமை ஒளிரும் சபை! 'இதைத் தவிர' வேறு எதையும் மகிமை என கூறும் சபையை, புறக்கணியுங்கள்!*

*– A.W.டோசர்*

---

## கிறிஸ்துவைப் பற்றிய தகவலா? கிறிஸ்துவின் வெளிப்பாடா?

*"என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை 'அறிகிற அறிவின் மேன்மைக்காக' எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும்* **அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும்** *அறிகிறதற்கு..... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்றார் (பிலி.3:8-10). வேதாகமத்தில் ஆயிரக்கணக்கான வசனங்கள் உண்டு. அதில், எந்த வசனத்தையும் எடுத்து சாமர்த்தியமாயும் இன்பமாயும் நாம் பிரசங்கிக்கலாம்! ஜனங்களும் ஆஹா! நல்ல பிரசங்கம் என்பார்கள்! அநேகர் அப்படியே செய்து வருகிறார்கள். ஆனால் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால்,* **கிறிஸ்துவே நமது பிரசங்கப்**

**பொருளாயிருக்க வேண்டும்.** *அவரில்லாத பிரசங்கங்கள் உமிகளுக்குச் சமானம்! அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவையே பிரசங்கித்தார். 'எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு* **அவரையே நாங்கள் அறிவித்து,** *எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்' என்றார் (கொலோ.1:28). 'இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷம்' என்றும் மகிழ்ந்தார் (ரோமர்.16:26).*

*பவுல் அப்போஸ்தலன் தேடின 'அறிவு' எப்படிப்பட்டது? இயேசுவானவர் பெத்லகேமில் பிறந்தார், நாசரேத்தில் வளர்ந்தார், யூதேயாவின் கலிலேயாவெங்கும் நடந்து பிரசங்கம் பண்ணினார், நோயாளிகளைக் குணமாக்கினார், யூதருடைய அதிகாரிகள் அவரைப் பிடித்து பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையிலறைந்து கொன்று போட்டார்கள்!! என்கிற அறிவா? மாம்சத்தின்படியான இந்த அறிவு, அன்றிருந்த எல்லா யூதர்களுக்கும் இருந்தது போலவே, பவுலுக்கும் இருந்தது! ஆனால் அவர் தனக்கு லாபமானவைகளையும், மேன்மையாயிருந்தவைகளையும் குப்பையாகத் தள்ளிவிட்டு முழு வாஞ்சையோடு தேடின 'அறிவு' வேறே!*

> **மரணத்தை ஜெயித்து, உன்னத மகிமையில் பிரவேசித்து, தனக்குக் காட்சியருளின கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ளும்படி நாடிய 'அறிவல்லவோ' பவுல் தேடினார்!**

*அந்த அறிவையே தனக்கு ஒப்பற்ற மேன்மையாக மதித்தார். அவருடைய அந்த ஆவலையே ஆண்டவர் திருப்தி செய்தார். மற்றெல்லாரைப் பார்க்கிலும் 'கிறிஸ்துவைப்பற்றிய இரகசியங்கள்' பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டதை நிருபங்களில் காண்கிறோம்.*

*சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரச்செய்யவும் விரும்புகின்ற தேவ ஊழியர்கள், பவுல் நாடித்தேடிய கிறிஸ்துவை அறிகிற இந்த அறிவிலேயே வளர வேண்டும். இந்த அறிவு புஸ்தக வாசிப்பினாலோ, மற்றவர்கள் சொல்வதினாலோ வராது.* **அவரே தம்மை நமக்குள் வெளிப்படுத்த வேண்டும்!** *அப்படி வெளிப்படுத்துவதாகவே அவரும் சொல்லியிருக்கிறார்: 'நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன்' என்கிறார் (யோவான்.14:21).*

*'பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ*

*அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்' (மத்.11:27).* *பிதா ஒருவரே குமாரனை உள்ளபடி அறிந்தவர். மேலும் குமாரன் எவனுக்குப் பிதாவை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனே பிதாவை அறிவான், வேறொருவனும் பிதாவை அறியான் என்கிறார்! ஆக, இங்கே குமாரனை எப்படி அறிவது? என்று சொல்லப் படவில்லை.*

**குமாரன் பிதாவை வெளிப்படுத்துகிறவராகையால், குமாரனை அறியாமல் பிதாவை அறியமுடியாது. ஆகையால் ஆண்டவர் பரிசேயரைப் பார்த்து: 'நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்' என்று சொன்னார்! (யோவான்.8:19).**

*அப்படியானால் குமாரனை அறிவதற்கு வழியென்ன? பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான் என்று சொல்லியிருப்பதால்* **பிதாதான் குமாரனை வெளிப்படுத்த வேண்டியவர்!** *அவர் தமது ஆவியின் மூலமாய் குமாரனை வெளிப்படுத்துகிறார். 'பரிசுத்த ஆவியினாலே யன்றி, இயேசுவை கர்த்தர் என்று ஒருவனும் அறியவோ, சொல்லவோ முடியாது' என வாசிக்கிறோம்!*

*ஆவியானவர் வரும்போது, அவர் சுயமாய் பேசாமல்* **கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்தி** *அவரை நமக்குள் மகிமைப்படுத்துவாரென்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். ஆகவே, பிதாவை குமாரன் வெளிப்படுத்துகிறார். "குமாரனை" பிதா தமது ஆவியின் மூலமாய் வெளிப்படுத்துகிறார்.*

**குமாரனை அறிவதே பிதாவை அறிவதாகும். குமாரனைத் தள்ளிவிட்டு நாம் நேரே பிதாவை அறியும்படி நாடினால், அவர் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து: "இவர் என் நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள், என்னை அவரில் காண்பீர்கள்" என்கிறார்.**

*தேவ ஆவியானவரிடம் நாம் போனால் அவரும் கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து: "நான் என்னையல்ல, அவரை உங்களுக்கு வெளிப்படுத்தவும், அவரை மகிமைப்படுத்தவும், உங்களை அவரண்டை நடத்தவும் வந்தேன்" என்கிறார். இவ்வாறு கிறிஸ்துவே நடுநாயகமாக விளங்குகிறார்.*

*ஆவியினால் நிறைந்தவன் கிறிஸ்துவினால் நிறைந்தவன்! கிறிஸ்துவினால் நிறைந்தவன் பிதாவினால் நிறைந்தவன்! ஆகையால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவரும் நடுநாயகமாகிய கிறிஸ்துவின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்க வேண்டியது நியாயமே!*

*– பரமானந்தம் ஐயர்*

## ‘நன்றியுள்ளவர்களை’ வைத்து கட்டப்படும் குடும்பம்! சபை!

***ந***ம் மாம்சத்தில் ஏராளமான கஞ்சத்தனம் குடிகொண்டுள்ளது! அதில் ஒரு மோசமான ஆவிக்குரிய கஞ்சத்தனம் “நன்றி!” கூறுவதே யாகும். ஒருமுறை இயேசுவிடம் வந்த 10 குஷ்டரோகிகள் “எங்களுக்கு இரங்கும்!” என ஏகமாய் சத்தமிட்டார்கள். அந்தப்படியே இயேசு அவர்களை சுத்தமாக்கினார். ஆனால் அவர்களில் ஒருவன் மாத்திரமே திரும்பி வந்து உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி.... அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான் என வாசிக்கிறோம் (லூக்கா.17:13-15). **“ஸ்தோத்திரம் செய்வது” தேவனை மகிமைப்படுத்தும் உன்னத செயல்** என்பதை தேவன் இங்கு எடுத்துக் காட்டியுள்ளார். இதற்கு நேர்மாறாக நன்றிகூறிட கஞ்சத்தனம் கொண்டவர்கள் பிசாசையே மகிமைப்படுத்துகிறார்கள்!

**ஆவிக்குரிய மூத்த சகோதரரான ‘சகோதரர் ராப்சன்’ குறிப்பிடும்போது, எங்கள் பெங்களூர் சபையிலிருந்து வெளியில் சென்ற அனைவருமே “நன்றி இல்லாதவர்கள்” என வருத்தமுடன் கூறினார்!**

இதுபோன்ற நன்றியில்லாதவர்கள், ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒருநாளும் வளரவே மாட்டார்கள். நன்றி கூறிய அந்த குஷ்டரோகியைப் பார்த்து “உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” என இயேசு கூறினார். **நன்றியுள்ள ஜீவியத்தில் விசுவாசமும் சேர்ந்து வளருவதை** இயேசு குறிப்பிட்டதை நாம் மறந்துவிடக்கூடாது (லூக்கா.17:19). இவர்கள் ஏன் கர்த்தருக்கும் கர்த்தருடைய சபைக்கும் நன்றி இழந்தார்கள்? தங்களை ஏதோ ஒரு விதத்தில் ‘தகுதியுள்ளவர்கள்’ என எண்ணிய அவர்களது மாம்சீகமான சிந்தையேயாகும்! இவ்வாறு நன்றி இழந்தும், அதனிமித்தம் வளர்ச்சியை இழந்தும் வாழும் ஜீவியம் “தேவனை மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும்” உள்ள வீணானதும், உணர்வில்லாததும், இருளடைந்ததுமான ஜீவியமேயாகும் (ரோமர்.1:21).நன்றி இழந்த ஜீவியம் கொண்டவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடையாதபடியால், முடிவில் அவர்களை தேவன் அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்! என்ற பரிதாபமே ஏற்படுகிறது! (ரோமர்.2:24).

தேவன் நம்மை வைத்துள்ள ‘அவரது சபைக்கு’ நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமாகும். ஏனெனில் “**கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தார்**” எனவும் “**தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்**” எனவும் வாசிக்கிறோம். இயேசு கூறும் போது, சபையிலுள்ள ஒரு சீஷனுக்கு “குளிர்ந்த தண்ணீர்”

*கொடுத்ததைக்கூட அவனுக்குரிய* **பலனை** *நான் தருவேன் எனக் கூறினார். சாதாரண ஈவை விட பலமடங்கு* **Reward** *என்பது மேலானதாகும். சபையிலுள்ள ஒரு சிறு செயலுக்கு கூட, சபையின் தலைவராய் இருக்கிற இயேசு அப்படியொரு நன்றியின் பலனை அளிக்கிறார்!* **சிறுசிறு விஷயங்களுக்கும் நன்றி கூறுவது ஆவிக்குரிய உயர்ந்த தன்மை** *என்பதை இயேசுவிடமிருந்து நாம் கற்றுக் கொள்வோமாக. சின்னச் சின்ன விஷயங்களுக்கும் நம் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் நன்றியுள்ளவர்களாய் இருப்பது, நம் குடும்பத்தைக் கட்டும்! சபையும் கட்டப்படும்!*

**அதற்குப் பதிலாக சின்னச் சின்ன விஷயங்களில் தோன்றும் நன்றியில்லாத தன்மைகள், நம் குடும்ப வாழ்வின் தோட்டத்தையும் சபையின் திராட்சத் தோட்டத்தையும் அழித்துவிடும்!**

*"இவ்வாறு திராட்சத் தோட்டங்களை கெடுக்கிற சிறு நரிகளைப் பிடியுங்கள்" என உன்னதப்பாட்டு.2:15 நம்மை எச்சரிக்கிறது. சிறுசிறு கோபங்கள், ஆத்திரங்கள் ஆகிய அனைத்தும் ஏராளமான தவறான எண்ணங்களையும், சந்தேகங்களையும் கணவன் மனைவிக்குள் கொண்டு வந்துவிட முடியும். நாம் எல்லோருமே வீட்டிலுள்ள சிறுசிறு பாச்சான்கள், பூச்சிகள், பல்லிகள், எறும்புகளை ஒழித்திட அதிக நேரம் செலவழிக்கிறோம். சிறந்த சுகாதாரத்திற்கு அது நல்லது என்றும் நம்புகிறோம். அதேபோன்ற உணர்வுகள், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏன் இருப்பதில்லை? கணவன் மனைவி, சபையிலுள்ள சகோதரன் சகோதரிகளிடம் ஒருவரையொருவர் மன்னிப்பதும், மன்னிப்பு கேட்பதும், நன்றியாயிருப்பதும் ஆகிய சிறுசிறு விஷயங்களில் கவனம் கொண்டிருந்தால் நம்முடைய வீடும், நம்முடைய சபையும் கட்டப்படுமே!*

*இதுபோன்ற செய்தியைக் கேட்டவுடன் "சரி, இன்று முதல் நான் நன்றியுள்ளவனாய் இருப்பேன்" என நீங்கள் முடிவு செய்திட இயலாது. இரகசியம் என்னவென்றால், எபேசியர்.5:18 குறிப்பிடுகிறபடி* "**நாம் பரிசுத்தாவியினால் நிறைந்திட வேண்டும்!**" *என்பதே அந்த இரகசியமாகும். ஆவியில் நிறைந்து, அற்புத ஊழியம் செய்வதற்கு அல்ல. அதற்குப் பதிலாக, ஆங்கில வேதாகமம் குறிப்பிடுவதுபோல்* "**ஒருவருக்கொருவர் பேசுங்கள்**" **(Speaking to one another**) *என்பதற்காகவே ஆவியில் நிறைந்திருக்க வேண்டும்! இன்று குடும்பத்தில் காணும் துயரம் என்னவெனில், கணவன் மனைவிக்குள் ஏற்படும் 'சிறு மனஸ்தாபத்தினிமித்தம்' ஒருவருக்கொருவர் ஏற்பட்ட விரிசல்* "**தேவனுடைய பரிசுத்தாவியை துக்கப்படுத்தும்**" *என்றே எபேசியர்.4:30 கூறுகிறது. நாம் சகோதரர்களுக்குள்ளே நகைச்சுவையாய் பேசிக்*

*கொள்வதை இங்கு குறிப்பிடவில்லை.... அதே போன்ற நல்ல ஆவியோடு* **மனைவியோடு பேசுவதையே** *நான் குறிப்பிடுகிறேன்! "ஒப்புரவாகாத எந்த கோபமும், எரிச்சலும் தேவனுடைய இருதயத்தை வேதனை அடையச் செய்யும்" என்பதை அறிவோமாக. புதிதாய் வந்த விசுவாசிகளோ அல்லது அரைகுறை மனம் கொண்டவர்களோ, இந்த ஒப்புரவாகுதலை சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பாக செய்திடலாம்!*

**ஆனால், முழு இருதயம் கொண்ட ஒரு சீஷன் 'உடனடியாக' ஒப்புரவாகி விடுவான்! இதுபோன்ற ஒப்புரவாகும் ஒரு இருதயம் 'உன்னதமான இருதயம்' என்றே கூற வேண்டும்.**

*"கர்த்தருக்குப் பயந்து, அவர் வழியில் நடக்கிறவன் பாக்கியவான்" (சங்.128:1) என்றே உங்கள் வாலிப நாட்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் திருமண வாழ்வில் பிரவேசிக்கும் மனைவி* ("Like a Fruitful vine") *கனிதரும் திராட்சை செடியைப்போல் இருப்பாள். "ஆண்டவராகிய இயேசு, கனிதரும் திராட்சை செடி!" என இருக்க, இங்கேயோ மனைவியும் திராட்சை செடி என கூறப்படும் பாக்கியமே, கர்த்தருக்கு பயந்தவனுக்கு, தேவன் தரும் மனைவியும் இருப்பாள். அவளிடம் கிறிஸ்துவின் ஆவி தங்கியிருக்கும்! குறிப்பாக, தாழ்மை கொண்டவளாய் இருப்பாள்.* **தாழ்மைக்குரிய ஒரு இரகசியம் என்னவென்றால் 'விரைந்து சென்று ஒப்புரவாகுவதேயாகும்!'.**

*இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையில் 'மறுதலிக்கும்' கசப்பான நிகழ்ச்சி நடந்தது. பேதுருவோடு ஒப்புரவாகும் செயலை முதலாவது இயேசுதான் தொடங்கினார்! அங்கிருந்து, பேதுருவை திரும்பிப் பார்த்தார்! அந்தப் பார்வை "நான் உன்னை மன்னித்து விட்டேன்" எனக்கூறும் பாசம் நிறைந்த பார்வையாயிருந்தது! பேதுருவும் மனம் திரும்பினான்! இந்த கிறிஸ்துவின் ஆவியே 'திராட்சை செடியைப் போல் வந்த மனைவியிடம்' இருக்கும். கணவனுக்கும் மனைவிக்கும் மன அழுத்தங்கள் ஏற்படும்போது "வேகமாய் உணர்வடைந்து ஒப்புரவாகும் மனைவியே" கிறிஸ்துவின் ஆவியைக் கொண்ட திராட்சை செடியாய் இருக்கிறாள். இதற்குப் பதிலாக, முகத்தை திருப்பிக் கொண்டு நீண்ட நாட்கள் பேசாமலும், ஒப்புரவாகாமலும் இருப்பது, குடும்பத்திற்கு எவ்வளவு சஞ்சலம்! வரப்போகும் 'மனைவிக்கு' இந்த ஒப்புரவாகும் இருதயம் இருப்பதை எப்படி காண்பது? அது கடினம்தான்....*

**ஆனால், "வாலிபர்களே, உங்கள் வாலிப நாட்களில் இந்த ஒப்புரவாகும் ஆவியை நீங்கள் பெற்றிருந்தால், உங்களுக்கு தேவன், கண்டிப்பாய் ஒப்புரவாகும் உணர்வுள்ள இருதயம் கொண்ட மனைவியைத் தருவார்!"**

*பரிசுத்தாவியினால் நிறைந்திராமல், "ஒருவருக்கொருவர் பேசுவதும், ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேட்பதும், ஒருவருக் கொருவர் நன்றியுள்ளவர்களாய் இருப்பதும்" ஆகிய நறுமணமான வாழ்க்கையைப் பெற்றிட இயலாது.* **நம் எல்லோருக்கும் இப்போது தேவை..... பரிசுத்தாவியின் நிறைவு மாத்திரமேயாகும்.** *அதுவே, நன்றியின் ஜீவியத்தை நமக்குத் தரும். உண்மையான "நன்றியுள்ள ஆவி" உங்கள் ஜீவியத்தையே மாற்றிவிடும்! மீனின் வயிற்றில் யோனா இருந்த சூழ்நிலை, மன உளைச்சலும் அமைதியும் இல்லாத சூழ்நிலையாகும்!* **அவன் கர்த்தரை துதி செலுத்த ஆரம்பித்தவுடன்,** *அந்த சூழ்நிலையிலிருந்து வெளியே வந்திட, மீன் அவனை வாந்தி பண்ணி விட்டது!*

**நன்றியில்லாத ஒன்பது குஷ்டரோகிகள் சரீரத்தில் சுகமானாலும், அவர்கள் அனைவருக்கும் 'ஆவிக்குரிய குஷ்டரோகம்' சுகமாகவில்லை! நன்றியும் ஸ்தோத்திரமும் நிறைந்த சுகமான இருதயமே குடும்பத்தைக் கட்டும்!**

*'பெருமைகொண்டவர்கள்' ஒருபோதும் நன்றியுள்ளவர்களாய் இருப்பதில்லை, நன்றியுள்ளவர்கள் இயேசுவுக்கும் அவருடைய சபைக்கும் ஆர்வமுடன் வந்து துதியும் ஸ்தோத்திரமும் செலுத்தி அங்கு வாசம் செய்வார்கள்! அந்த ஒன்பது குஷ்டரோகிகள் நன்றி செலுத்த வராததால் யாருக்கு நஷ்டம்? நீங்கள் சபைக்கு வருவதை நிறுத்தி விட்டால் யாருக்கு நஷ்டம்? இயேசுவுக்கும் அல்ல, சபைக்கும் அல்ல!* **எனக்குதான் சபை வேண்டும்! சபைக்கு நான் வேண்டும் என்பதில்லை! என் குடும்பத்திற்கே சபை வேண்டும்!** *இதுபோன்ற 'தேவை நிறைந்த' தாழ்மை உள்ளம் பெற்ற, நன்றியுள்ளவர்களை வைத்தே, தேவன் தன் சபையை கட்டுகிறார்! ஏனெனில் அங்குதான் கிறிஸ்து மகிமைப்படுகிறார்!!*

*– ராபர்ட் டேவிட் (பூனே)*

---

## 'குழந்தையின் இருதயம்' தாருமே தேவா!

**இ***ந்த தாத்தா கதை, ஒரு உண்மை சம்பவம்தான்! அதை அவரே கூறும்போது: "நான் **34** - வயதில் 'இயேசுவின் பக்தனாய்' இருந்த அந்த நாட்களில், என் 8-மாத மகளை - கம்மோடில் (சிறுநீர் போக உட்கார வைக்கும் ஸ்டூலில்) வைத்து, எடுப்பதுண்டு! **2**-நிமிடத்தில் அந்த வேலை முடிந்துவிடும்! அன்று, சுமார் **4,5** தடவை என் சிறு மகளை தூக்கிப் பார்த்தும், **10**-நிமிடத்திற்கு மேலாகியும் போகவில்லை! எனக்கோ வேலை அவசரம்..... **11**-வது நிமிடத்தில் 'சற்று வேகமாக' தூக்கிப் பார்த்ததும், என் மகள் 'என்னை ஒரு கூரிய பார்வை' பார்த்தாள்! அது* "**ஏனப்பா, இப்படி ஆத்திரம்?**" *என கனிவுடன் கேட்பதாய் என் உள்ளத்தில் தொனித்தது!*

**அவ்வளவுதான், என் அவசர வேலையை தூக்கிப்போட்டுவிட்டு, கம்மோடு முன்பாக உட்கார்ந்து விட்டேன்! 'உள்ளம் உடைந்து' என் ஆவியை சுத்தம் செய்து, ஜெபித்த பிறகு.... புன்னகையுடன் மகளை தூக்க, அவளும் புன்சிரித்தாள்!**


*காலம் பல கடந்து, இப்போது தாத்தாவாகி விட்டேன்! அன்று, இன்னொருவர் காரில் குடும்பமாக பயணம் செய்தோம்! காரை மூத்த மகன் ஓட்ட, மனைவி மற்றும் மகளும் என் 2½ வயது பேத்தியும் கலகலப்புடன் பேசிக்கொண்டே பயணித்தோம்!* A/c-*க்காக கண்ணாடி ஜன்னல் மூடப்பட்டிருந்தது! 'திடீரென்று' அதிவேகம் எடுத்த மூத்த மகனிடம் நான், "இவ்வளவு வேகம் வேண்டாம்!" என கூறியும், அந்த வேகத்தில் இன்னொரு காரை உரசுவதுபோல் சென்றதும், சத்தத்தை உயர்த்தி "ஏன் இந்த வேகம், வேறொரு காரை மோதப் பார்த்தாயல்லவா?" என்று சத்தமாய் அதட்டி கூறினேன். அவ்வளவுதான்.... எல்லோருடைய 'கலகலப்பும்' நின்றது! ஒரே நிசப்தம்.... ஒரு நிமிடம் கழித்து என் 2½ வயது பேத்தி, ஆங்கிலத்தில்* "Thatha, are you angry?" **தாத்தா, என்ன கோபமா?** *எனக் கேட்டாள்! நான் உள்ளம் உடைந்தேன்.... அந்த 'சில வினாடி' ஆண்டவரிடம் என் ஆவியில் மன்னிப்பு கேட்டேன்! ஆகிலும், மகனிடம் மன்னிப்பு கேட்கவில்லை..... ஏனெனில், அப்படிக் கேட்டால், 'வேகத்தை குறைத்து ஓட்டும் புத்திமதியை' இழந்துவிடுவான்!*

**எனவே, ஆண்டவரோடு ஒப்புரவாகிய அடுத்த வினாடிகளில், முகம் மலர சம்பாஷித்து, எல்லோரும் மகிழ்ச்சியடைய, என் பேத்தியும் மனம் குளிர்ந்து புன்னகை பூத்ததும், 'மீண்டும் மகிழ்ச்சி' அந்த காருக்குள் வந்தது!**

*இந்த நிலையில், எனக்குள் ஓர் ஜெபம் ஏறெடுத்தேன்: "ஓ, கர்த்தாவே..... அந்த குழந்தையின் நெஞ்சில் கொண்ட மெல்லிய உணர்வு என்னிலும் நிலைத்திருக்க 'குழந்தை இருதயம்' தாரும்! அந்த குழந்தை உணர்த்தியவுடன் உணர்வடைந்த 'நல்ல இதயம்' தொடர்ந்து தாரும்! பாவத்தை கண்டித்து 'உணர்த்தும்' 'தூய ஆவியானவரை' துக்கமடையச் செய்யாதிருக்க கிருபையை தாரும்!" ஆமென்.*

*விடுமுறை முடிந்து, ஊர் திரும்ப பஸ்ஸில் வழியனுப்பும்போது, என் பேத்தியிடம்* "Thatha is a bad thatha.... you are so Good*!" (தாத்தா ஒரு கெட்ட தாத்தா, நீ தான் நல்லவள்) என்றதும், அவள் திரும்பி* "No! Thatha also is very Good*!" என மகிழ்ச்சியுடன் கூறி விடை பெற்றாள்! "ஆ, இதே சாட்சியை பரிசுத்த ஆவியானவரும், என்னைக் குறித்து கூறுவது எத்தனை பாக்கியம்!" என எண்ணி மகிழ்ந்தேன்!*

– *Selected*



**கானானியனாகிய சீமோன் அப்போஸ்தலன், "தடுமாற்றமில்லாமல்" தன் உயிர் ஈந்த சீஷன்!**

**(AD 68)**

"போதகரே! நீர் எருசலேமிற்கு சில நாட்களுக்கு முன் சென்றபோது, யூதர்கள் உம்மை கல்லெறிய வகைதேடினார்கள்! அதற்குள்ளாகவே நீர் மீண்டும் அங்கு போவது சரிதானா?" எனக் கேட்ட சீஷர்களில் ஒருவன்தான் இந்த **செலோத்தே என்னப்பட்ட சீமோனாகிய** இயேசுவின் சீஷன். இவனுக்கு மறுபெயர் கானானியனாகிய சீமோன் என்பதாகும்.

அன்று இந்த சீஷன் கேட்ட கேள்விக்கு இயேசு கூறிய பதில், இந்த சீமோன் உள்ளத்தில் பசுமரத்தாணியைப்போல் பதிந்தது! சீமோனின் செவிகளில் விழுந்த இயேசுவின் ஜெயத்தின் வார்த்தைகள் என்னவெனில் **"ஒளியில் நடப்பவனுக்கு இடறல் இல்லை! இருளில் நடப்பவனே இடறி விழுவான்!"** என கெம்பீரித்தார். அன்று அதை விளங்கிக்கொள்ளாத சீமோன், தன் குருவுக்காக பணியாற்றிய ஊழியத்தில் நன்றாய் விளங்கி கொண்டான்! சீமோன் சென்ற ஊழிய ஸ்தலங்களிலெல்லாம் மரணத்திற்கு ஏதுவான உபத்திரவங்களைச் சந்தித்தான். இச்சமயத்தில்தான், குரு கூறிய "ஒளியில் நடப்பவன் இடறலடையான்!" என்ற குருவின் வீர வார்த்தைகள் அவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது! அதாவது, சீமோன் ஒளியின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து நடந்தபடியால், தனக்கு நேர்ந்த உபத்திரவத்தில் சிறிதுகூட **தடுமாற்றம் அடையவில்லை! அல்லது, இடறலடையவில்லை.**

இந்த செலோத்தே எனப்பட்ட சீமோன், எகிப்து தேசத்திற்கு சென்று பிரசங்கித்தார்! அங்கிருந்து வட ஆப்பிரிக்க தேசத்திற்கு சென்று பிரசங்கித்தார்! இந்திய பெருங்கடல் தீவாகிய 'மௌரிட்டியன்' தீவிற்குச் சென்று பிரசங்கித்தார்! இன்றைய பிரிட்டன் தேசத்தின் சூழ இருக்கும் சிறுசிறு தீவுகளுக்கெல்லாம் சென்று பிரசங்கித்தார்! ஓடி ஓடி அவர் பிரசங்கித்த இடமெல்லாம் துயரங்கள்!

ஆகிலும் அவர் மனம் தளரவில்லை. கடைசியாக பெர்சியா நாட்டிற்கு சென்றபோது, அங்கு இயேசுவின் சகோதரன் யூதாவை சந்தித்தார். இருவரும் சேர்ந்து செய்த ஊழியத்தில் AD 68 வருடத்தில் யூதா மரித்தார். அதே ஆண்டு இந்த சீமோன் எண்ணற்ற வாதனைக்குள்ளாகி, **சீரியா தேசத்து கவர்னரால் சிலுவையிலறைப்பட்டார்!** இவையனைத்திற்கும் ஒரே இரகசியம், அன்று இயேசு கூறிய "என்னைப் பின்பற்றி ஒளியில் நடப்பவன் இடறலடையான்..... அல்லது தடுமாற்றம் கொள்ளான்" என்ற குருவின் வசனங்கள்தான்! ஏராளமான உபத்திரவங்களில், இந்த சீஷன் "தடுமாற்றமில்லாமல்" தன் குருவிற்கு இரத்த சாட்சியாக மரித்தார்! என்பதே இவரைக் குறித்த விசேஷம்!!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே, உன் சிருஷ்டிகரை ஏமாற்ற இயலாது! என அறிந்து, மனந்திரும்பு!

ஆதியாகமம் 4 – ம் அதிகாரத்தில் அந்த அதிசய நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது. காயீன், ஆண்டவரையே ஏமாற்ற முயற்சிப்பதை நாம் காணலாம். "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?" என்ற ஆண்டவரின் கேள்விக்கு காயீன் சொல்லும் கள்ளமான விடையைக் கவனியுங்கள்: "நான் அறியேன், என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்பதுதான். எத்தனை துணிச்சலான ஏமாற்றுப் பதில்! அரசியலிலும், பொது வாழ்விலும் பேர் பெற்றத் தலைவர்களுக்கு, இந்நாட்களில் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்படுவதை நாம் அறிவோம். அவர்கள் ஜீவனைப் பாதுகாக்கக் காவலாளிகள் உண்டு. அந்தக் காவலாளிகள் இரவும், பகலும் துப்பாக்கிகளைக் கையிலேந்தியவர்களாகக் கண்ணும் கருத்துமாக அந்தக் குறிப்பிட்ட நபர்களைப் பின்தொடர்ந்து அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றனர். அந்த காவலாளிகளுக்கு "தங்கள் எஜமானர் எங்கெங்கே செல்லுகின்றார். எங்கெங்கே தங்குகின்றார்" என்ற அனைத்து விபரங்களும் நன்கு தெரியும். என் தம்பி ஆபேலுக்கு நான் அப்படிப்பட்டதொரு காவலாளியோ? என்று, முந்தின இரவில் அவனைக் கொலைசெய்துவிட்டு, இரத்தக்கறை இன்னும் நன்கு காய்வதற்கு முன்பே மிகுந்த துணிச்சலுடன் காயீன், ஆண்டவரையே ஏமாளியாக்க முயலுகின்றான்!

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் யோபு பக்தனின் நாட்களிலும் இந்த ஏமாற்று வித்தை இருக்கத்தான் செய்தது. ஆனபடியால்தான் **"மனுஷனைப் பரியாசம் பண்ணுகிறது போல சர்வ வல்லவரைப் பரியாசம் பண்ணுவீர்களோ?"** (யோபு.13:9) என்று அவர் கேட்டு வைத்தார். மனிதன் ஆண்டவரை ஒருக்காலும் ஏமாற்ற முடியாது. அவர் அவனுடைய செயலுக்குத் தக்கதான பலனைத் தப்பாது அளித்து விடுகின்றார். "ஆண்டவரே, தேவரீர் அவனவன் செய்கைக்குத்தக்கதாகப் பலனளிக்கிறீர்" (சங்.62:12) என்றே சங்கீதக்காரன் கூறினார்.

"என்னை சிருஷ்டித்த, சிருஷ்டி கர்த்தாவை ஏமாற்ற முடியாது!" என்ற எண்ணமே "தெய்வ பயத்தை" உங்களுக்கு துவக்கி விடும்! இந்த தெய்வ பயம் மாத்திரமே, நம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு வழங்கும் பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும் அடைந்திட வழி வகுக்கும்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.